

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், சேராப்பட்டு ஊராட்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடைக் கட்டடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்து, குடும்ப அட்டை தாரர்களுக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை,துவரம் பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார், உடன் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளார்கள்.

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில்– கடலூர் மேற்கு மாவட்டம்

# திட்டக்குடி - விருத்தாசலம் - நெய்வேலி - பண்ருட்டி தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர், ஜூன் 30 -

கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, ஆகிய சட்ட மன்ற தொகுதி BLA2. ( பாக நிலை முகவர்கள்) ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவதை யொட்டி மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் பாக முகவர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் இன்று (30.06. 2025) மாலை 4 மணியளவில் சென்னை கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள காடாம் புலியூர் ஏ.வி. மஹாலில் நடைபெறுகிறது.

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச நிர்வாகிகள் BLA 2 ( பாக நிலை முகவர்கள்) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், வடக்கு ஒன்றியம் ஆகியவற்றை ஒருங்கிணைந்து நடைபெற்ற, பாகம் முகவர் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) பயிற்சி கூட்டம், மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி பொறுப்பாளர் , முன்னாள் எம்.எல்.ஏ., அங்கயற்கன்னி, தொகுதி பார்வையாளர் சின்னமணி,ஒன்றிய செயலாளர் ஆர்.நாராயணசாமி,அவைத்தலைவர் ஆசிரியர் இராமமூர்த்தி,ஒன்றிய பொருளாளர் சுப்பிரமணியன், நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார்,நகர செயலர் த. தமிழ் செல்வன்,துணைசெயலர் ஆர்.சுப்புராயலு,பேரூர் செயலர் கே.வி.பி.சங்கர்,அவைத்தலைவர் ஆர்.ராமர்,பேரூராட்சி தலைவர் கோகிலாகுமார்,மற்றும் கழக நிர்வாகிகள், பூத்டிஜிட்டல் ஏஜெண்டுகள்,தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலங்குடியில் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம்!

மயிலாடுதுறை, ஜூன் 30 –

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் கடலங்குடி கடைத் தெருவில் நடைபெற்றது. தெரு முனை பிரச்சாரக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை வடக்கு ஒன்றியச் செயலாளர் என்.இளையபெருமாள் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். பிரகாஷ் வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பானர் எம்.கே. மருது, துணை அமைப்பாளர்கள் சௌ.சர்வோ தயன், எம்.எஸ். விஜய், ஜெ. ஜுபையர், கே.வினோத்பாண்டியன், எஸ்.ஆனந்தன், கோசி.மதி.திருமாவ ளவன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் எம்.சுப்ரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.சுரேஷ், ஜி.குருமூர்த்தி, எம்.கே.ஸ்டா லின், ஒன்றிய துணைச் செயலாளர்கள் வி. சுரேந்தர், ஏ.சரவணன், பிரபா பாலாஜி, பொருளாளர் எம்.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், தாட்கோ தலைவர் என். இளையராஜா, தலைமைக் கழக பேச்சாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, இளம் பேச்சாளர் கோ.இரகுநாத் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான. இமையநாதன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சாந்தி, ராமலிங்கம் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வை.அர்ச்சுணன்,

ஜி.டெய்சி, எம்.பிரேம்குமார், கதிர்ராதாகிருஷ்ணன், ஆர்.ராஜ்குமார், பி.பிரகாஷ், வி.விஜய குமார் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய மகளிர் அணி மைப்பாளர் எம்.ராமாவதி, ஒன்றிய துணை அமைப்பாளர்கள் பா.பாலாஜி,

எச்.ஹெஜ்முகமது, ஏ.தினேஷ் குமார், என்.ஆனந்த், எஸ்.கவாஸ்கர், கே.பிரபாகரன், கடலங்குடி கிளை நிர்வாகிகள் கே.அன்புச் செல்வன், ஆர்.அம்மைநாதன், எம்.வீராசாமி, கே.பார்த்தசாரதி, பி.ராதா, என்.செந்தில், ஏ.கவியரசி, சி.கரிகாலன், எஸ்.காளிமுத்து, பி.பாலமுருகன், ஆர்.ராஜகுரு, கே. மதியழகன், முகமது புகாரி, பாக்கிய லெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.முத்தமிழ்ச் செல்வன் நன்றி கூறினார்.

ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைக்க உடன்பிறப்பே வா!

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக BLA2, BDA (டிஜிட்டல் தொழில் நுட்பம்) பயிற்சி கூட்டம்!



## மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிவிப்பு!

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி

"ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மயிலம், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாக நிலைமுகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் (BDA) பயிற்சிக்கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம், திண்டிவனம் சட்டமன்ற தொகுதிகளுக்கு தி.மு.க. தகவல் தொழில் நுட்பஅணி சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் OTN AC மற்றும் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட தேதிகளில் தொகுதி வாரியாகஒன்றிய நகர பேரூர் கழக (BLA2) மற்றும்பூத்டிஜிட்டல்முகவர் (BDA) பயிற்சிநடைபெறவுள்ளது.

| நாள்&நேரம் | தொகுதி | ஒன்றியம் | இடம் |
|---|---|---|---|
| 30.06.2025 காலை 10.00 மணி | மயிலம் | வல்லம் - வடக்கு,தெற்குமத்திய | K.S.M.திருமணமண்டபம் நாட்டார்மங்கலம் |
| 30.06.2025 பகல் 12.00மணி | மயிலம் | மயிலம் - வடக்கு,தெற்கு,மத்திய - ஒலக்கூர்மேற்கு | K.T.S.திருமணமண்டபம் தீவனூர் |
| 30.06.2025 மாலை 3.00மணி | திண்டிவனம் | மரக்காணம்-கிழக்கு, மேற்கு,மத்திய மரக்காணம்பேரூர் | A.M.S.திருமணமண்டபம் சிறுவாடி-முருக்கேரி |
| 30.06.2025 மாலை 6.00மணி | திண்டிவனம் | திண்டிவனம்நகரம் ஒலக்கூர்கிழக்கு | மயிலம்முருகன்திருமண மண்டபம் திண்டிவனம் |

பயிற்சிக் கூட்டத்தில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மட்டுமின்றி (BLA2 ) க்களும் கலந்து கொள்ள வேண்டும்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில்

# பூத் டிஜிட்டல் ஏஜென்ட் - பாகநிலை முகவர்கள் - பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!



இராணிப்பேட்டை, ஜூன் 30 -

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி" ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்யேக செயலில் (APP) உள்ளீடு செய்யப்படவேண்டியது குறித்து இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், சோளிங்கர், இராணிபேட்டை, ஆற்காடு ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றியநகரபேரூர் கழகங்களில் 30.06.2025 திங்கள் கிழமை மற்றும் 01.07.2025 செவ்வாய் கிழைமைகளில் 02.07.2025 புதன்கிழமை, 03.07.2025 வியாழக்கிழமை ஆகிய தேதிகளில் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது,

இக்கூட்டங்களை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் சட்டமன்றநாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், இராணிப்பேட்டை மாவட்ட பொறுப்பாளர்கள் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**இராணிப்பேட்டை தொகுதி**

30.06.2025 - மாலை 4.00 மணி மாஸ் மஹால் வாலாஜா பேட்டை - வாலாஜா நகரம் , வாலாஜா கிழக்கு ஒன்றியம் , வாலாஜா மத்திய ஒன்றியம்,

30.06.2025 - திங்கள்கிழமை - மாலை 5.00 மணி S. K. மஹால் அம்மூர் ரோடு, முத்துகடை - இராணிபேட்டை நகரம், வாலாஜா தெற்கு ஒன்றியம், அம்மூர் பேரூர், ஆற்காடு மேற்கு ஒன்றியம் , மேல்விஷாரம் நகரம்,

**ஆற்காடு தொகுதி**

01.07.2025 - செவ்வாய் கிழமை - மாலை 3.00 மணி நகர கழக அலுவலகம், ஆற்காடு ஆற்காடு நகரம் , கணியம்பாடி ஒன்றியம்

01.07.2025 - செவ்வாய் கிழமை - மாலை 3.30 மணி முப்பதுவெட்டி ஆற்காடு கிழக்கு ஒன்றியம்

01.07.2025 - மாலை 4.00 மணி - திமிரி மத்திய ஒன்றிய கழக அலுவலகம் - திமிரி மத்திய ஒன்றியம், திமிரி மேற்கு ஒன்றியம் , திமிரி பேரூர், விளாப்பாக்கம் பேரூர்

01.07.2025- மாலை 4.30 மணி திமிரி கிழக்கு ஒன்றிய கழக அலுவலகம் - திமிரி கிழக்கு ஒன்றியம் , கலவை பேரூர்

**சோளிங்கர்**

02.07.2025 - காலை 9.30 மணி சதாசிவம் திருமண மண்டபம், பன்னியூர் கூட்ரோடு. காவேரி பாக்கம் வடக்கு ஒன்றியம் காவேரிபாக்கம் தெற்கு ஒன்றியம், காவேரிபாக்கம் பேரூர்

02.07.2025 - காலை 10.30 மணி D P C வளாகம், ரெட்டிவலம், நெமிலி வடக்கு ஒன்றியம், நெமிலி தெற்கு ஒன்றியம், நெமிலி பேரூர், பனப்பாக்கம் பேரூர்

02.07.2025 - மாலை 3.00 மணி உதயம் கிராண்டு ஹோட்டல், சோளிங்கர் சோளிங்கர் நகரம் ,சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் ,சோளிங்கர் மத்திய ஒன்றியம், சோளிங்கர் வடக்கு ஒன்றியம், சோளிங்கர் மேற்கு ஒன்றியம் ,

**அரக்கோணம்**

03.07.2025 - காலை10.00 மணி மாரியம்மன்கோவில் மினி ஹால் நெமிலி - நெமிலி மத்திய ஒன்றியம்,

03.07.2025 -காலை 10.30 மணி அன்னப் பூரணி மஹால் அரக்கோணம் - அரக்கோணம் நகரம்,

03.07.2025 -காலை 11.30 மணி OTP மஹால் மங்கம்மாபேட்டை- அரக்கோணம் மத்திய ஒன்றியம், அரக்கோணம் மேற்கு ஒன்றியம்

03.07.2025 - மாலை 04.00 மணி - சாத்விகா திருமண மண்டபம் - தக்கோலம் அரக்கோணம் கிழக்கு ஒன்றியம், தக்கோலம் பேரூர்

03.07.2025 - மாலை 05.00 மணி - கலா பாரடைஸ், நெமிலி - நெமிலி கிழக்கு ஒன்றி யம்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்
### ஜூன் 30 (2014)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி
### ஜூன் 30 (2018)



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராகவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**